**செ.வெ.எண்:09** **நாள்:04.09.2021**

**இந்திய சுதந்திர அமைப்பு ஓட்டத்தை (FIT INDIA FRIEEDOM RUN 2.O-2021) மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் .த.பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள் துவைக்கி வைத்து பங்கேற்றார்கள்.**

இந்திய சுதந்திர அமைப்பு ஓட்டம் (FIT INDIA FRIEEDOM RUN 2.O-2021) · அனைத்து மக்களும் குறைந்தது 30 நிமிடம் உடற்பயிற்சிக்கென நேரம் ஒதுக்கி தீர்மானம் நிறைவேற்றும் வகையிலும், சோம்பல், மன அழுத்தம், கவலை, நோய்கள் உள்ளிட்டவைகளில் இருந்து விடுபட உடற் தகுதியை மேம்படுத்தும் வகையிலும், உடற்பயிற்சிக்கான நேரம் ஒதுக்கவும், ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை பின்பற்றும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் கரூர் மாவட்டத்தில் இன்று (04.09.2021) காலை நேரு யுவகேந்திரா மற்றும் மாவட்ட விளையாட்டு ஆணையம் இணைந்து நடத்திய இந்திய சுதந்திர அமைப்பு ஓட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் .த.பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் துவைக்கி வைத்து பங்கேற்றார்கள். ஓட்டமான ஆனது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து தாந்தோணி அரசு கலைக்கல்லூரி, பாரதிதாசன் நகர் நாலாவது தெரு வழியாக சென்று மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் முடிவுற்றது. இந்நிகழ்ச்சியில் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. லியாகத், நேரு யுவகேந்திரா மாவட்ட இளையோர் அலுவலர் திரு.பிரிட்ஜஸ் கௌஷிக், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.சுப்பிரமணியம், நேரு யுவகேந்திரா நிகழ்ச்சி அலுவலர் திரு.ஜெயப்பிரகாசம், மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு. செல்வம் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கரூர்.**